

★ விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயா விடுத்துள்ள செய்தி

# ஒரே குடையின் கீழ் அணிதிரள்வதுதான் மாவீரர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்

எங்கள் தாய் மண்ணுக்காக மடிந்த மாவீரர்களை இன்று நாங்கள் நினைவு கூருகின்றோம். எமது இனத்தின் வரலாற்றில் இந்த மாவீரர் நாள் ஒரு பிரதானமான நாள், இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு.கோ. மகேந்திரராஜா(மாத்தயா)மாவீரர் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது நெஞ்சில்விடுதலை நெருப்பையும்உணர்வில்சுதந்திர தாகத்தையும்சுமந்துஎமதுமக்களுக்காக மடிந்தஇம்மண்ணின்மைந்தர்களைதமிழீழம்கௌரவிக்கின்றநாள்இதுமாவீரர்-எங்கள் மண்ணின்மூலைமுடுக்குகள் எங்கும் எழுந்து நிற்கின்ற இந்த மாவீரர்களின் கல்லறைகளுக்கு முன்நின்று அவர்களின் கனவுகளே எங்கள் நினைவுகளாய் அவர்களின் சுவடுகளே எங்கள் பாதைகளாய்க்கொண்டு பயணத்தை தொடர்வோம் என உறுதியெடுத்துக் கொள்கின்றோம். எமது மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது 18 வயதையும் கடந்து வெற்றிகளைப் பெற்றபடி வளர்ந்து வருகிறது இப்போராட்ட வெற்றியென்பது எண்ணிக்கையில் ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி பல்லாயிரமாகிப் பெருகியதையா அர்த்தப்படுத்துகின்றது? அல்லது சிறிய கைத்துப் [illegible] ஆயுதங்களைக் கொண்ட இயக்கமாக மாறியதையா அர்த்தப்படுத்துகின்றது? அல்லது சிறிய குழுவாக எமது மண்ணிலேயே மறைந்திருந்த நாம் இன்று. முழு உலகமுமே வியக்கும் வண்ணம் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக உருவாகியதையா அர்த்தப்படுத்துகின்றது?மாவீரர்கள் அதர்மத்தைக் கண்டுவெகுண்டெழுந்தவர்கள். தர்மத்தை காக்கப் போராடியவர்கள். மனித வாழ்வை மேம்படுத்தும் புதிய சிந்தனைகளையும், புதிய பாதைகளையும் உருவாக்குபவர்கள்: உருவாக்க காரணமாய் இருப்பவர்கள். இவற்றை சாதிப்பதற்காக, தனது நலன், தனது குடும்பம், தனது விருப்பம் என்பன போன்ற — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 282 வியாழன் 22-11-1990 (கார்த்திகை 06) ஐ அவ்வல் 04

கொழும்பில் தமிழ்ச் சட்டத்தரணி ஒருவரிடம்

# புலிகளின் பெயரைச் சொல்லி பணம்பறிக்கும் முயற்சிதோல்வி

## முஸ்லிம்காங்கிரஸ் பொருளாளர் சம்பந்தம் தமிழ் இளைஞர் இருவர் கைது

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற போர்வையில் கொழும்பில் ஒரு தமிழ்ச்சட்டத்தரணியை ஆயுத முனையில் மடக்கி அவரிடம் பணம் வசூலிக்க இரு இளைஞர்கள் எடுத்த முயற்சி தோல்வியுற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பகல் 2 மணியளவில் டாம் வீதியில் உள்ள சட்டத்தரணி ஏ தவனேசனின் அலுவலகத்திற்குள் நுழைந்த இரு தமிழ் இளைஞர்களே இம்முயற்சியில் ஈடுபட்டார்கள்.

உண்மையான கட்சிக்காரர்கள் போல இந்த இளைஞர்கள் தென்படாததால் அச் சட்டத்தரணிக்கு இவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது.

ஒருஇளைஞர் தமது கையில் இருந்த கடிதக்கோவையோடு சேர்த்து ஒரு பையையும் பிடித்திருந்தார். அந்தப்பையில் ஆயுதம் போன்ற ஓர் பொருள் வேளியே தள்ளிக் கொண்டிருந்தது. திரு. தவனேசன் உடனடியாக அவ் விளைஞன் மீது பாய்ந்தார் அலுவலக ஊழியரின் உதவியுடன் அவன் மடக்கிப்பிடிக் கப்பட்டான். இதனையடுத்து இரண்டாவது இளைஞர் ஓடி விட்டார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பொருளாளர், உறுப்பினர் நீக்கம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாள்ர் வாபர் பாரூக், உறுப்பினர் எம். எல். டசிர் ஆகியோர் அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பாருக்கிடமிருந்த இரு சுழல் துப்பாக்கிகள் காணாமல் போனது தொடர்பாக திருப்திகரமான விளக்கம் அளிக்கத் தவறியதன் காரணமாகவே அவர் நீக்கப்பட்டதாகவும், உறுப்பினர் பசிரின் பெயர் இந்த விவகாரத்தில் அடிபடுவதால் அவர் நீக்கப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

திருநெல்வேலி, அச்சுவேலி, நாயன்மார்கட்டு, வல்வெட்டித்துறை

## பல இடங்களில் வான் தாக்கு

திருநெல்வேலியில் பரமேஸ்வராச்சந்தியில் நேற்றுக் காலை இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியதால் சி ஜோகேஸ்வரன், எஸ். பத்மலோஜனா என்பவர்களின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

முன்பும் இப்பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அச்சுவேலிப்பகுதியிலும் நேற்றுக் காலை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலால் எஸ். குணராணி (20, ஆசிரியர் கதிரமலைநாதன் (37) ஆகியோர் காயமடைந்தனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படைப் பீரங்கித் தாக்குதல் வயோதிபப் பெண் பலி

வல்வெட்டித்துறைக் கடலில் இருந்து நேற்று அதிகாலை 6 மணி முதல் 7 மணி வரைக் கடற்படைக் கப்பலில் இருந்து குடியிருப்புக்களை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

உடுப்பிட்டி, நாவலடிப் பகுதிகளில் இவை விழுந்து வெடித்ததால் சின்னத்தம்பி தெய்வி (78)என்பவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார். (39)

## ஹெலிகொப்டர் பரவலாகத் தாக்கு

நேற்றுக் காலை முதல் ஹெலிகொப்டரில் இருந்து வலி வடக்கு, வலி தெற்குப் பகுதிகளிலும், யாழ் நகரிலும் பரவலான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சுன்னாகத்தில் வீதியால் வந்து கொண்டிருந்த கே. வேலுப்பிள்ளை (60, வீமன் காமம்) தலையில் பலத்த காயமடைந்தார்.

அளவெட்டியில் கிருஷ்பதாசன் சிவபாக்கியம் (45),

— 04 ஆம் பக்கம் பார்க்க

வவுனியாவில் மாவீரர் தினத்தையொட்டி

## அலங்கரிக்கப்பட்ட இடங்களுக்கு வர முயன்ற ராணுவம் மீது தாக்கு

நேற்று வவுனியா மாவட்டத்தில் வவுனியா-மன்னார் வீதியில் உள்ள பட்டாணிச்சூர் எனும் இடத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிக்கொடி ஏற்றி வீதி முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காமினி வித்தியாலய இராணுவ முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் இவை அமைந்திருந்தன. இவ் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி அலங்கரிக்கப்பட்ட இடத்திற்கு வரும்போது இடைமறித்து விடுதலைப்புலிகள் தாக்குதல்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வலி வடக்கில் கடும் மோதல்

நேற்று முன்தினமிரவும் நேற்றும் வலி வடக்கில் பல முனைகளில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது

நேற்று அதிகாலை 1மணியளவில் கட்டுவன் சந்தியிலிருந்து கட்டுவன் ஐயனார் கோவிலை நோக்கியும், வயாவிளான் மகாவித்தியாலயத்திலிருந்து புன்னாலைக் கட்டுவனை கோக்கியும் முன்னேற முயன்ற இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலை அடுத்துப் பின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தச்சன்காட்டு மோதலில் 5 புலிகள் வீரமரணம்

வசாவிளான், தச்சன் காட்டுச் சந்தி ஆகிய இரு பகுதிகளில் இருந்தும் வெளியேறிய இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் இராணுவம் பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பியது.

இம் மோதல் சம்பவத்தில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வான் தாக்குதல் மத்தியிலும் மாவீரர் தினம் ஆரம்பம்

பலத்த வான் தாக்குதல்களுக்கும் மத்தியில் மாவீரர் நாள் நேற்று யாழ் மாவட்டம் பூராகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள், அலுவலகங்கள் உட்பட அனைத்து ஸ்தாபனங்களிலும் நேற்றுக் காலை 9 மணிக்கு கொடிகள் ஏற்றப்பட்டு கீதமும் இசைக்கப்பட்டது.

கூட்டுறவாளர்களின் யாழ் கோட்ட நிகழ்ச்சிகள் மானிப்பாயில் இருந்து கூட்டுறவுக்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நோயாளர் பராமரிப்பு நிதி

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கம் ''நோயாளர் பராமரிப்பு நிதி'' திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

போர்க்கால நெருக்கடியில் அரச உதவியின்மையால் ஏற்படும் அவசர தேவைகளிற்கு இந் நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ப-4)



## இதய அஞ்சலி

தோற்றம்: 24 — 02 — 1951



மறைவு: 20 — 11 — 1990

அமரர்

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்)

நாடி வருவோருக்கு
நல்லுதவி புரியும் நன் மகன்
புன்முறுவல் காட்டி
புண்பட்டவர்களை புனிதப்படுத்துவோன்
கூடிப் பணிபுரிவோரை
அன்புடன் அரவணைப்போன்

நெஞ்சமெல்லாம் நிறைந்து
எங்கள் உயிரோடும் உணர்வோடும்
இணைந்த பெருந்தகை

அமரர் வேலுப்பிள்ளை நடேசபிள்ளை
அவர்களுக்கு

எமது இதய அஞ்சலிகள்

ஊழியர்கள்,
உணவுத் திணைக்களம்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

22.11.1990.

11119


அமெரிக்கர்கள் முன்னணியில்

# உலகில் மூன்று லட்சம் பேர் எயிட்ஸ் நோயினால் பீடிப்பு

உலகில் சுமார் மூன்று லட்சம் பேர் எயிட்ஸ் நோய் வைரசுகளினால் பீடிக்கப்பட்டு நோயாளிகளாகியிருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது கடந்த அக்டோபர் மாதம் எயிட்ஸ்நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 தினால் அதிகரித்திருக்கிறது.

உலக சுகாதார நிறுவனம் இந்த விபரத்தை சில தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலேயே பெரும் எண்ணிக்கையானவர்கள் எயிட்ஸ் வியாதியால் புதிதாகப் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவிலேயே எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாகப் பதியப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நோ மாற்று மருந்து விற்பனைக்குத் தடை!

வவுனியா நகரில் உடல் லவியை முறிக்கும் வலிகொல்லி (பெயின்கில்லர்) மருந்துவகைகளின் விற்பனைக்கு இராணுவம் தடை செய்துள்ளது.

அத்துடன் கிரேப்வீகை சப்பாத்துக்கள், வாகனங்களுக்குப் பாவிக்கப் பயன்படும் கிளச் பிளேட்டுக்கள் என்பனவற்றை விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யூரியா உர விற்பனைத்தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் வவுனியாவில் இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## இழுவைப் படகு கரை ஒதுங்கியது

முல்லைத்தீவில் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கப் பயன்படுத்தப்பட்ட இழுவைப்படகு கடற் கொந்தளிப்பு காரணமாக நங்கூரத்தை அறுத்து கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டது.

இதுதற்போது வட்டுவாயில் பகுதியில் கரை ஒதுங்கி மணலில் புதைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

முல்லைத்தீவில் இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிக்கு மிக அண்மையிலேயே இது கரை ஒதுங்கியுள்ளது.

(43,38)

## 15 வீதமான ஊழியர்கள் ஒய்வுபெற விருப்பம்

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமைபுரியும் பல ஊழியர்கள் சுய விருப்பின் பேரில் ஒய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது கடமைபுரியும் ஊழியர்களில் 15 வீதமானோர் இத்திட்டத்தின் கீழ் ஒய்வுபெற முன்வந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் போதனா வைத்தியசாலையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், தாதி மற்றும் சிற்றூழியர்களுக்கும் மேலும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

(74)



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

துரித சலவைக்கும் பளிச்சிடும்வெண்மைக்கும்மில்க்வைற் சலவைப் பவுடர். 50 கிறாம் பவுடர் தனிப் பைக்கற் ரூ 3 00 1டசின் ரூ. 33/-. 100 வெற்றுப் பைக்கற் ஒரு அழகிய லேஞ்சியை அன்பளிப்பாகப் பெற்றுத்தருகிறது மில்க்வைற்-யாழ்ப்பாணம். 11051




யாழ் மாவட்டக் கூட்டுறவாளர் நடாத்தும்

தமிழீழ மாவீரர் நாள்

## சிறப்புச் செய்தி

தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தையும் வென்றெடுக்க தம் உயிரையே கொடுத்த உத்தமர்கள் எம் உள்ளத்தில் குடிகொண்ட மாவிரர்களே. அவர்கள் மலரப் போகும் தமிழீழத்தின் அத்திபாரக் கற்கள். அவர்களின் தியாகங்கள் விலைமதிப்பற்றவை. மக்களால் மதிக்கப்படுபவை. அந்த மாவீரரின் பாதச் சுவடுகள் வழியே நாமும் சென்றால் எமது விடிவு மிக விரைவில் கிட்டும். அது எம்மை சுதந்திர புருசர்களாக வாழவைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

கூட்டுறவாளர்.
தீவக கோட்டம்.
22.11.1990.

11106

மாவீரர் வாரம்: போர்க்காலச் சிந்தனை -2

## எது மேல்?

''நேர்நின்றோர் வீரனை வீழ்த்தலின் மேல்; ஊரும் கவசம் பெயர்த்து விடல்''

(போர்க்குறள்)

நேருக்கு நேர் நின்று ஓர் போர்வீரனை எதிர்த்து வீழ்த்தலிலும் பார்க்க மெதுமெதுவாக ஊர்ந்து வரும் ஒரு பாரிய கவசவாகனத்தைப் பெயர்த்து, அழித்தல் மாபெரும் வீர சாகசமாகும் என்பது போர்க்குறளின் கருத்து.

''கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது''

(திருக்குறள்)

காட்டிலே ஒரு முயலைக் குறி தவறாமல் எய்த அம்பைக் காட்டிலும், வெட்டவெளியில் நின்ற யானை மீது குறி தவற வீசிய வேலைத் தாங்குதல் இனிது என்பது திருக்குறட்கருத்து.

— முருகனடியான்

## மாவீரர்கள் நினைவாக வீதிகள்தோறும் எழுச்சிக் காட்சிகள்

மாவீரர் தினத்தை முன்னிட்டு குடாநாடு பூராவும் அலங்கார வளைவுகளும், மாவீரர் நினைவுப்பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றனர்.

பல இடங்களிலும் மாவீரர்களின் பெரிய அளவிலான திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீதிகளில் பெரிய அளவிலான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அலங்கார வளைவுகளில் போராட்ட நிகழ்வுகளைக் குறிக்கும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன

கட் அவுட்களில் அனேகமானவை பனை ஓலைப் பாய்களில் அமைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் வீதிகளில் பெரிய அளவிலான மாவீரர் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மீசாலையில் மகளிர் பிரிவினரால் அமைக்கப்பட்ட பந்தலில் தமிழீழத்தின் பல்வேறு நிகழ்வுகளைக் குறிக்கும் சித்திரம் வரையப்பட்டுள்ளது

சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் நீளமான தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சரசாலை-கனகன்புளியடிச் சந்தியில் நீளமான பந்தலொன்று அமைக்கப்பட்டுள்ளது நுணாவில் சந்தி மற்றும் நுணாவில் - வைரவர் கோவில் பகுதிகளிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சிலுவை வடிவையுடைய பந்தலே குடாநாட்டின் மிக நீளமான பந்தலெனக் கருதப்படுகின்றது.

மிருசுவில் பகுதியில் கண்டி வீதியில் அருகருகே பல அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கைதடி-அனாதைச் சிறுவர் இல்லத்திற்கு அருகில் உள்ள குடாக்கடலின் மத்தியில் மாவீரர் ஒருவரின் திருவுருவப் படத்தைத் தாங்கியபடகு ஒன்று மிதக்கவிடப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புச் சந்தியில் நாலாபுறமும் அலங்கார வளைவுகளும், சித்தன்கேணிச் சந்தியில் நான்கு அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றனர்.


தட்டாதெருச்சந்தி கலாயோகி சனசமூக நிலைய முன்றலில் சிறப்பான காட்சிகளை உள்ளடக்கிய அலங்கார வளைவொன்று அமைக்கப்பட்டுள்ளது. வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடி சனசமூக நிலையமும் புதுமெரு கூட்டப்பட்டு மாவீரர்களின் திருவுருவங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சுன்னாகம், திருநெல்வேலி பகுதிகளில் அணையா விளக்குகள் ஏற்றப்பட்டுள்ளன.

கல்வியங்காடு இராசவீதி-டச்சுவீதிச் சந்தியில் ஞானபாஸ்கரோதயா சங்க ஆதரவில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவில் உணர்ச்சிச் சித்திரங்கள் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன.

(16-70-74)

## நேற்று வானொலியில் ஒலித்தது தலைவர் குரல்



''உங்கள் சுவடுகளில் எங்கள் பாதங்கள் தொடரும்'' என்ற உன்னத உத்வேகத்துடன் தமிழீழ மக்கள் அந்நிய ராட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள மாவீரர் திருநாளில், நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரனின் கம்பீரக் குரல் 'புலிகளின் குரல்' பண்பலை வானொலிச் சேவையில் ஒலித்தது. மாவீரர் நினைவாக தன் உள்ளத்து உணர்வுகளை வார்த்தை வடிவில் உணர்ச்சி உரையாக தலைவர் வெளிப்படுத்தியதனை பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்கள் செவிமடுத்தனர், இனஎழுச்சியில் ஒன்றினர்.

பகைமைநாடி, அலைபாயும் கடல் தாண்டும் 'ஈழத்தமிழர்'

# கட்டுநாயக்கா நிலையத்திலிருந்து நாளாந்தம் 500 பேர் பறக்கின்றனர்

வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களால் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு கணிசமான அளவு வருமானம் தினசரி கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தினசரி 500 தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் பறந்து செல்வதாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய புள்ளிவிபரமொன்றிலிருந்து அறிய முடிகிறது.

தற்பொழுது அனேகமான தமிழர்கள் மேற்கத்திய நாடுகளுக்கே பயணமாவதாகவும் இவர்கள் அங்கு அகதிகளாகத்தங்கியிருந்து தங்களின் நிலைகளை உறுதி செய்துவிட்டு அந்த நாடுகளிலோ அல்லது வேறு நாடுகளிலோ வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படைத் தளபதியின் கூற்றுக்கு முதல்வர் கண்டனம்

## அரசியல் விவகாரத்தில் படை அதிகாரி கருத்து வெளியிடுவது தவறானது

இந்திய கடற்படையின் புதிய தளபதியாகப் பதவியேற்கவுள்ள வைஸ் அட்மிரல் ராம்தாஸ் தமது அட்சாங்கத்திற்கு எதிராகப் பிரசாரத்தை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளார் என தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட பல இலங்கைத் தமிழர்களை தமிழக அரசு விடுவித்திருப்பதாக திரு ராம்தாஸ் தெரிவித்துள்ளதை முதல்வர் கருணாநிதி கண்டித்துள்ளார்.

இந்திய மண்ணில் ஆயுதக் குழுக்களை விரட்டியடிப்பது மாநில அரசாங்கத்தைச் சார்ந்ததாகும் என்ற திரு. ராம்தாஸின் அறிக்கைபற்றி தமிழக முதல்வர் குறிப்பிடுகையில் அரசியல் விவகாரமொன்றில் கடற்படை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுவது தவறானது எனத் தெரிவித்துள்ளார்.

1983-ம் ஆண்டு தொடக்கம் தமிழக மாநிலத்திலும், பயிற்சி முகாம்களிலும் கூட அப்போதைய மாநில அரசினதும் மத்திய அரசினதும் சம்மதத்துடன் இலங்கைத் தமிழர்கள் இருந்து வந்துள்ளார்கள் என கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினை

## சந்திரசேகர்-விஜே சந்திப்பில் எழும்

தற்போது மாலைதீவு தலைநகர் மாலேயில் நடைபெறும் சார்க் மாநாட்டில் இலங்கை விவகாரமும் இந்திய இலங்கை பிரதமர்களால் பிரஸ்தாபிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகருடன் அவரது முதன்மைச் செயலர் திரு. தேஷ்முக் வெளியுறவுச் செயலர் திரு முக்ஸிம்துபே உட்பட ஒன்பது பேர் கொண்ட உயர் நிலைக்குழுவும் மாலைதீவு சென்றுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்களுடனும் அவர் இருதரப்பு உறவுபற்றிப் பேசுவார் என புதுடில்லி வட்டாரங்கள் நேற்றுக்கூறின.

இலங்கைப் பிரதமர் திரு டி. பி. விஜேதுங்கவைச் சந்திக்கையில் இலங்கை இன விவகாரமும் எழும் எனக்கூறப்படுகிறது.

## கவிஞர் சுரதா வைரமுத்துவுக்கு சிறப்புவிருது

கலைத்துறை வித்தகர்க்கெனத் தமிழக அரசினால் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அறிஞர் அண்ணா விருது பெற மணிவண்ணன், கே. எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோரும், பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற சுரதா, வைரமுத்து ஆகியோரும் தெரிவாகியுள்ளனர். தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அடுத்தமாதம் முதலாம் திகதி இவ்விருதுகளை வழங்குவார்.

## சத்தியசாயிபாபாவின் 65 -வது வருட அவதார தினம்

காரைநகர் பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா சமித்தியினர் நடாத்தும் 'பகவான்ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 65-வது வருட அவதாரதினவிழா' 23-ம்திகதி வெள்ளிக்கிழமை காரைநகர் சயம்புவீதி அமரர் வித்துவான் மு. சபாரத்தினம் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணியிலிருந்து நிகழ்ச்சிகள் நடைபெறும் மாலை 4 மணிக்கு 'பகவானின் போதனைகள்', 'பகவானின் அவதார மகிமை' என்னும் தலைப்பில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

பேபி சுப்பிரமணியம்

## தலைமையகத்தில் நேற்று தேசியக்கொடி ஏற்றினார்

நேற்றுக்காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான திரு பேபி சுப்பிரமணியம் (பேபி அண்ணர்) தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாவீரர் நினைவுத்தூபியை செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி திறந்து வைத்தார்.

ராணுவத்துடன் இணைந்துள்ள

## தமிழ்க் குழுக்கள்மீது அன்பரசு வெறுப்பு

இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு விசா வழங்குவதில் வி. பி சிங் அரசினால் விதிக்கப்பட்ட, கடுமையான நிபந்தனைகளை தளர்த்துமாறு இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியின் செயலாளர் திரு. இரா. அன்பரசு எம்.பி. பிரதமர் திரு எஸ். சந்திரசேகரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சில குழுக்களின் தலைவர்களுக்கு புதுடில்லியில் புகலிடம் வழங்கப்படல் வேண்டும் எனக்குறிப்பிட்ட அவர், ஆனால் இலங்கை இராணுவத்துடன் இணைந்திருப்போருக்கு வழங்கப்படக்கூடாது என்றும் அவர் பிரதமரை மேலும் கேட்டுக்கொண்டார்.

மீண்டும் அதே இடத்தில்

**சித்ராலயா**

★ தெளிவான தரமான போட்டோஸ்ரட் பிரதிகள்
★ பாஸ்போட் படம்
★ அடையாள அட்டைப்படம்
★ கறுப்பு - வெள்ளை படங்கள் 12''×10'' சைஸ்ஸிற்கு என்லாஜ்மென்ற்

351, கோவில் வீதி, நல்லூர்.
(நல்லைக் கந்தசுவாமி கோவில் அண்மையில்)

11108

## கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி வேலுப்பிள்ளை நடேசபிள்ளை அவர்களின் மறைவிற்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது. அன்னாரின் மறைவு கூட்டுறவிற்குப் பெரும் இழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினருக்கு சங்கம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

தலைவர், இயக்குநர்சபை, ஊழியர்கள்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

11118

ஊரடங்கால் விநியோகம் இல்லை;

## யாழ் பிரதம தபாலகத்தில் தபாற்களைப் பெறலாம்

கப்பலில் கொண்டுவரப்பட்ட 441 தபாற் பொதிகள் தரம்பிரிக்கப்பட்டுவிட்டதாகவும் இன்று யாழ் பிரதம தபால் அலுவலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மக்களின் தபாற்கள் யாழ் பிரதம தபாலகத்தில் காலை 10மணி முதல் 12 மணிவரை விநியோகம் செய்யப்படவிருப்பதாகவும் பதில் பிரதம தபால் அதிபர் எம். தேவசகாயம் தெரிவித்துள்ளார்.

தற்போதிய சூழ் நிலையில் தபாற் சேவகர்ளால் வீடுகளுக்கு நேரில் சென்று தபால் விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (33)

### ஹெலிக்கொப்டர்...

அச்சுவேலியில் கு. கதிரமலை, தெல்லிப்பழையில் குமணசிங்கம் (20), திருநெல்வேலியில் நாகம்மா (50) ஆகியோர் காயமடைந்தனர்.

(32.48, ப 10, ப 2,ப24)

### வலி வடக்கில்...

வாங்கினர்.

இதேவேளைநேற்றுக்காலை தச்சன்காட்டிலிருந்து கொல்லங்கலட்டியை நோக்கியும் மாவிட்டபுரத்திலிருந்து மாவிட்டபுரம் அரசடிப்பகுதியை நோக்கியும் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் கடும்மோதல் ஏற்பட்டது.

பகல் இரண்டுமணிவரை இடம் பெற்ற மோதலைத் தொடர்ந்துஇராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு பலாலியில் இருந்து ஆலடிச்சுடலையூடாக பத்தமேனியை நோக்கி வரமுயன்ற இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

(48,ப10,32)

### அலங்கரிக்கப்பட்ட...

மேற்கொண்டனர். இதனை அடுத்து இராணுவம் இழப்புகளுடன் முகாம் திரும்பியது.

இதேபோல யாழ்ப்பாணம் வீதியில் உள்ள தாண்டிக் குளத்திலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்விடத்திற்கும் காமினி மகாவித்தியாலய இராணுவத்தினர் 2-பவல் கவச வாகனத்தில் வெளியேறியபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்

இதன்பின் இராணுவம் பின்வாங்கி முகாமிற்குள் சென்றது. (71)

### பல இடங்களில்..

நேற்றுக்காலை நாயன் மார்கட்டு செம்மணி வீதியில் மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலினால் கைலாசபதி (55) என்பவர் படுகாயமடைந்தார்.

வல்வெட்டித்துறை- ஊரிக்காடு பகுதியில் காலை 10 மணிக்கு இரு பொம்மர்கள் தாக்குதல்களை நடாத்தின.

(32,70, 74, ப 28, 33)

# வேங்கைகளின் தியாகஉணர்வை விலைகொடுத்து வாங்க முடியாது

— மாலினி

"நிர்க்கதிக்குள்ளாகி எம்மை நாடிவந்துள்ள கிழக்குமாகாண மக்களை அரவணையுங்கள். அவர்களுக்கு வாழ்வளியுங்கள். இதுவே நாட்டிற்காகத் தம்மை அர்ப்பணித்த மாவீரர்களுக்கு நீங்கள் செய்யும் கைமாறாகும்"

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் மாவீரர் நாள் நினைவாக யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்கள் நேற்று நடாத்திய நிகழ்ச்சிகளின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிபிரதிக்கட்சி அமைப்பாளர் திரு. செங்கதிர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி பேசும்போது: "ஸ்ரீலங்கா அரசு பலவிதமான ஆயுதங்களையும் பல நாடுகளில் இருந்து வாங்குகிறது, ஆனால் தலைவர் பிரபாகரனின் உறுதியான இலட்சியத்துடன் செயற்படும் விடுதலை வேங்கைகளின் தியாகஉணர்வையும், தமிழ் ஈழ லட்சியத்தையும் எந்த நாட்டில் இருந்தும் விலை கொடுத்து வாங்க முடியாது. எதிரியின் பலத்த சவாலுக்கு மத்தியிலும் மாவீரர் நாளைச் சிறப்பாகக் கொண்டாடும் கூட்டுறவாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்" என்றார்.

கூட்டுறவாளர்கள் சார்பாக திரு அருண்மாஸ்ரர் உரையாற்றுகையில் "மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றப் போராளிகளுடன் இணைந்து கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. (66)

### தச்சன் காட்டு.

செழியன் (சிதம்பரப்பிள்ளை சண்முகராசா, ஒட்டுமடம் யாழ்ப்பாணம்) நெல்சன் (வீரசிங்கம் இந்திரகுமார், கிளிநொச்சி), கணேஷ் (நாகஜோதி ஜீவநேசன், புத்தூர்), தம்பி (கந்தசாமி தம்பி, மயிலிட்டி), நவில் (நடராசா கேதீஸ்வரன், அச்செழு) ஆகியோர் வீரமரணமடைந்தனர்

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (48, 71)

### புலிகளின்...

இவர் கொடுத்த தகவலையடுத்து தப்பியோடிய இவரது சகாவான சண்முகநாதபிள்ளை தெமட்டக்கொடையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இளைஞர் இருவரும் தாம் 'ரெலோ' இயக்கத்தில் முன்னை நாள் உறுப்பினர்கள் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்தனர். பொலிஸார் பஷீர் என்பவரைத் தேடி வலைவிரித்துள்ளனர்.

பிடிபட்ட இளைஞர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரு சுழல் துப்பாக்கிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குஉரியவை எனத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சேகு இஸதீனின் வீடும், சட்டத்தரணி திரு. சிவனேசனின் அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (66)

### ஒரே குடையின்...

குறுகிய எல்லைக்குள்ளிருந்து தம்மை விடுவித்துக் கொண்டவர்கள்.

எமது நாடு, எமது மக்கள், எமது நலன் என்று தனது சிந்தனையினதும், கடமையினதும் எல்லைகளை விரிவாக்கிச் செயற்பட்டவர்கள்.

எமது போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதன் பொருள்தான் என்ன?

எமது மண்ணை மீட்க தர்மத்தை நிலைநாட்ட, சௌரவத்துடன் வாழ, எவ்வளவு மக்கள் முன்வருகின்றார்கள், எவ்வளவு மக்கள் தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள் - அர்ப்பணிக்க தயாராக இருக்கிறார்கள் என்பதே போராட்ட வளர்ச்சியை சுட்டிக்காட்டும்.

அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓரளவு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

எமது மக்கள் தமிழீழத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் நாம் எல்லோரும் உடன்பிறப்புக்கள் ஒரே குடும்பத்தவர்கள், என்ற உணர்வுடனேயே வாழ வேண்டும்.

கஷ்டங்கள், துன்பங்கள் யாருக்கு வந்தாலும் எப்பகுதியில் நிகழ்ந்தாலும், நாம் ஒவ்வொருவரும் எமக்கு நேர்ந்ததாகக் கருதி ஒருவர்க்கொருவர் உதவியாக. ஆறுதல் கூறியே வாழ வேண்டும்.

புவியியல் காரணிகளாலும், அரசியற் காரணிகளினாலும் தென்தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் மிகவும்மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த மக்கள் அனைவருமே அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர். அவர்களது சொந்த வசிப்பிடங்களிலிருந்து, விவசாய நிலங்களிலிருந்து, கடற்கரைகளிலிருந்து, காடுகளிலிருந்து, வெளி இடங்களுக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படுகிறார்கள் பல்லாயிரக்கணக்கானோர் அகதிமுகாம் என்ற பெயரில் பணயமாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட்டார்கள்.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் பலர் காணாமற் போயுமுள்ளனர்.

கடந்த 5 மாதக் கொடுமைகளால் அங்கே குடும்பங்கள் சிதைந்துள்ளன. கணவனுக்கு மனைவியின் நிலையோ, பெற்றோருக்குப் பிள்ளைகளின் நிலையோ தெரியாது. அகதிகளாக விரட்டப்பட்ட தமிழர்கள் நாளாந்தம் நோயாலும், பட்டினியாலும் அழிந்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக விடுதலைக்கு அதிக விலைசெலுத்திக் கொண்டிருக்கும் தென் தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறைப்பகுதி மக்கள் விடுதலைப் போராட்டத்தை அதிகளவில் நேசிக்கிறார்கள்.

இயலுமான வரை நாம் ஒவ்வொருவரும் இந்த மக்களின் துயரைப் பகிர்ந்து கொள்வதும் மாவீரர்கள் எந்த இலட்சியத் தாகத்தை நெஞ்சில் இருத்திக் களம் புகுந்து வீரமரணமடைந்தார்களோ அந்த இலட்சியத்தை உறுதியுடனும், நம்பிக்கையுடனும் செயற்படுத்தி இறுதி வெற்றியைக் காண நாம் அனைவரும் ஒரே குடையின் கீழ் அணி திரள்வதுதான் அவர்களுக்கு நாம் செய்கின்ற அஞ்சலியாகும்.

இத்தகைய தன்னலமற்ற தியாகிகளின், தாய்மண்ணின் விலங்கொடிக்க, எமது சுதந்திரக்கொடி பறக்க களத்தில போராடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவை செஞ்சில் நிறுத்தி இதயபூர்வமாக அவர்களுக்கு அஞ்சலி செய்கிறோம் ... நிமிர்ந்து நிற்கிறோம்!

### வான்...

கொடிகள் ஏந்திய ஊர்வலத்துடன் ஆரம்பிக்கப்பட்டு மாலை யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெற்ற காலை நிகழ்ச்சிகளுடன் முடிவுற்றன. (32ப10,50,66,13)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை நடேசபிள்ளை**

(உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்.)

நெருக்கடியான இக் கால கட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட சகல கூட்டுறவுச் சங்கங்களின் உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதில் அயராது உழைத்த அமரர் வேலுப்பிள்ளை நடேசபிள்ளை (உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்.) அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது குடும்பத்தவர்கட்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

கூட்டுறவுச் சபை;
யாழ் மாவட்டம்.
11127

## காலமானார்கள்

**திரு. தம்பாப்பிள்ளை சந்திரசேகரம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

**திருமதி சந்திரசேகரம்**

உரும்பராய் கிழக்கு தம்பாப்பிள்ளை சந்திரசேகரமும் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்னாரின் பாரியாரும் 20.11.90 அன்று அகால மரணமானார்கள். அன்னார் இரத்தினேஸ்வரி அப்புத்துரை, அருளேஸ்வரன், இராஜேஸ்வரன், காலஞ்சென்ற விமலேஸ்வரி, லோகேஸ்வரி சிவராஜசிங்கம், ஜெகதீஸ்வரன், பத்மனேஸ்வரி நாகராசசேகரம், நிர்மலேஸ்வரி கனகசிங்கம், காலஞ்சென்ற ஜோதீஸ்வரி, ஆனந்தேஸ்வரன் ஆகியோரின் தந்தையும் தாயாரும் ஆவர். அவர்களின் ஈமக்கிரியை அன்றே உரும்பராயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. ஜெகதீஸ்வரன்
மகன்

11121

UNIVERSITY
OF
JAFFNA

**Faculty of Agriculture**
**Kilinochchi**

Reference advertisement appeared on *1990 - 11 - 21* for the above Faculty.

Applications are called for the Post of Temporary Demonstrator in Agricultural Economics and NOT for the Post of Temp. Demonstrator in Agricultural Chemistry.

Regret very much for the error.

REGISTRAR
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990 . 11 . 21.
11120

## காலமானார்

**திருமதி பெரியதம்பி அழகம்மா**

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி பெரியதம்பி அழகம்மா நேற்றுக் காலமானார். இவர் தாமோதரம்பிள்ளை பெரியதம்பியின் அன்பு மனைவியும் பெ. சண்முகராசா (அஞ்சல் அதிபர்), பெ. மகேந்திரன், பெ. பாலசுப்பிரமணியம், செ. மலர்நாயகி, ஆ. சுமதி, ஆகியோரின் அன்புத்தாயாரும், ச. தவநிதியின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று காலை 10-12 மணிக்கிடையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: பெ. சண்முகராசா.
11128


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 22.11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.